# பொதுக்காலம் 17ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

ஞாலத்தைப் படைத்த இறைவனிடம் ஞானத்தை வரமாகக் கேட்டு வந்துள்ள உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் 17ஆம் ஞாயிறுத் திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்போடு வரவேற்கின்றோம்.

வரங்களால் நமது வாழ்வை வசந்தமாக்கிய இறைவனுக்கு நன்றி சொல்லி, வார்த்தைகளால் இறைவனை, உறவுகளை இழந்த தருணங்களுக்காக இறைவனிடத்தில் மனம் வருந்தி மன்னிப்பு வேண்டுவோம். மனம் திருந்தி மாண்புமிக்க மானிடமாகத் திகழ்வோம்.

இன்றைக்கு நமக்குத் தரப்பட்டுள்ள வாசகங்கள் ஞானத்தையே கருவாகக் கொண்டுள்ளன.

இன்றைய முதல் வாசகத்தில் சாலமோன் அரசர், இறைவனின் மாபெரும் மக்களினத்திற்கு நீதி வழங்கத் தேவையான ஞானத்தை இறைவனிடமே கேட்கின்றார். ஆதாம் ஏவாள் கீழ்ப்படியாமையால், நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்தின் கனியை உண்டதாலே, வளமை நிறைந்த வாழ்விலிருந்து விரட்டப்படுகின்றனர். ஆனால் இங்கு சாலமோன் தனது கீழ்ப்படிதலால், நன்மை தீமையைப் பகுத்தறிய தேவையான ஞானத்தை இறைவனிடமிருந்து பெறுகின்றார்.

இன்றையத் திருப்பாடலில், தாவீது அரசர் இறைவன் அருளிய திருச்சட்டத்தின்மீது தான் கொண்டுள்ள ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றார். ஆயிரக்கணக்கான பொன், வெள்ளிக் காசுகளை விட மேலான ஆண்டவரின் திருச்சட்டத்தை, அவருடைய ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிப்பதாக வாக்களிக்கின்றார். இறைவனின் பேரன்பையும் இரக்கத்தையும் இறைஞ்சுகின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்ட மக்களுக்கு தூய ஆவியார் தனது கொடைகளை வாரி வழங்குகின்றார். இதனால் கடவுள் அவர்களைத் தமக்கு ஏற்புடையோராக்கி, தமது மாட்சியில் பங்குபெறச் செய்கின்றார் என்பதை எடுத்துக் கூறுகின்றார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் இயேசு புதையல், முத்து மற்றும் வலை என மூன்று வகையான உவமைகளை தனது சீடர்களுக்கு எடுத்துரைக்கின்றார்.

புதையலைக் கண்ட மனிதரும், நல் முத்துக்களைத் தேடிச் சென்ற வணிகரும் தமக்குள்ள யாவற்றையும் விற்று அந்த விலை மதிப்புள்ள பொருளைப் பெறுகின்றனர்.

விண்ணரசினை இந்த உவமைகள் வழியாக இயேசு ஒப்பிடுகின்றார். விண்ணரசின் மக்களாக நாம் வாழ நம்மிடமுள்ள எல்லாவற்றையும் இழக்க முன்வர வேண்டும். நிலையற்றவைகளை துறக்கும் போது தான் மதிப்புள்ளவற்றை நாம் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

கோதுமை மணி மண்ணில் விழுந்து, மடிந்து, விளைச்சலைக் கொடுக்கும்போது தான் அது தூய, நல் அப்பமாக உருவெடுத்து, பலிபீடத்தில் இயேசுவின் உடலாக மாறி, நிலைவாழ்வை மாந்தருக்கு அளிக்கின்றது.

ஆசிரியர் தன்னையே மாணவர்களின் நலனுக்காக முழுமையாகக் கையளிக்கும் போது தான் அறிவு, ஆற்றல், திறமை நிறைந்த மாணவர்கள் உருவாக்கப்படுகின்றார்கள்.

இறுதியாக இயேசு, விண்ணரசினை கடலில் வீசப்படும் வலையோடு ஒப்பிடுகின்றார். நடுத்தீர்ப்பின் நாளில் நல்லோர், தீயோர் பிரித்தெடுக்கப்படுவதை சுட்டிக்காட்டுகின்றார்.

நாம் உயர் மதிப்புள்ளவற்றைப் பெற எவற்றையெல்லாம் இழக்கின்றோம்? சிந்திப்போம் இந்த தெய்வீகத் திருப்பலியில். நிலைவாழ்வை அளிக்கும் உணவைப் பெற, தகுதியான முறையில் திருப்பலிக் கொண்டாட்டத்தில் பங்கேற்க, நம்முடைய சோம்பேறித் தனத்தை இழக்கின்றோமா? நல்ல தரமான கல்வியின் மூலம் ஞானத்தைப் பெற நாம் விரும்பும் கேளிக்கை ஆட்டங்களை இழக்கின்றோமா?

பெறுவதை விட கொடுப்பதில் தான் இன்பம்; இழப்பதை விட இறைவனின் பிள்ளையாக இருப்பதே பேரின்பம் என்பதை உணர்ந்து இறைச் சமூகமாக திருப்பலியில் தொடர்ந்து இணைவோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. எமக்கு நிலைவாழ்வை வழங்க நாள்தோறும் பலிபீடத்தில் பலியாகும் எம் இறைவா!

உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்டு, திருச்சபைப் பணியாற்றும் திருப்பணியாளர்களை ஆசீர்வதியும். இவர்கள் இறைமக்களின் ஆன்மீக வாழ்வுக்காக தம்மையே இழந்து பணியாற்றும் அருளைத் தந்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. உம்முடைய மக்களை வழிநடத்த சாலமோனுக்கு ஞானத்தை கொடையாக அளித்தவரே எம் இறைவா!

உம் மக்களாகிய எங்களை வழிநடத்த தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆட்சியாளர்களை ஆசீர்வதியும். இவர்கள் மக்களை நீதியோடும், நேர்மையோடும் ஆட்சி செய்ய தேவையான அறிவையும், ஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. உம்மால் முன்குறிக்கப்பட்டோரை அழைத்து, உமக்கு ஏற்புடையோராக்குபவரே எம் இறைவா!

பல்வேறு நாடுகளில் துன்புறும் உமது மக்களுக்காக உம்மை வேண்டுகிறோம். இவர்களது துன்பத்தில் உமது அன்பும், அரவணைப்பும், ஆசீரும், ஆறுதலும் தொடர்ந்து இருந்து வழிநடத்திட இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. உம் வார்த்தைகளினால் எமக்கு ஒளியூட்டுபவரே எம் இறைவா!

அறியாமை இருளை நீக்க, அறிவொளி ஏற்றும் சான்றோர்களை ஆசீர்வதியும். இவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்காக தம்மையே இழந்து பணியாற்றும் தியாக உள்ளத்தைத் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**"கடவுள் அன்பாய் இருக்கிறார்!" 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com